# மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் -III, சென்னை முன்னிலையில்

I.A.No. 414 of 2010 in O.A.No. 86 of 2009

**இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி (Small Industries Development Bank of India) எண்.207 AIEMA டவர், இரண்டாவது தளம், முதல் பிரதான சாலை, அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை-600 058**

**எதிரிடை ... விண்ணப்பதாரர்**

**M/s.மேக்னோ காயில்ஸ் (M/s. Magno Coils) ஓர் உரிமையாளர் நிறுவனம், உரிமையாளர் திருமதி.பிரபா பாலகோபால், மேக்னோ காயில்ஸ், எண்.329, ராஜா தெரு, பாடி, சென்னை-600 050 (கடன்தாரர்) மற்றும் இரு நபர்கள்**

**... எதிர்வாதிகள்**

## அசையும் சொத்துக்கள் விற்பனைக்கான பொது அறிவிப்பு

மேற்காணும் விஷயத்தில், பிணையாகவுள்ள அசையும் சொத்துக்கள் விற்பதற்காக மாண்புமிகு DRT-III, சென்னை, தனது 24.12.2010 தேதியிட்ட ஆணை வாயிலாக கீழே கையொப்பமிட்டுள்ளவரை, வழக்கறிஞர் ஆணையராக நியமித்துள்ளது. மேற்காணும் ஆணைப்படி, கீழே அட்டவணையில் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனைக்கு உள்ளது.

**இதன் மூலம் அறிவிப்பது யாதெனில்; கீழ்க்காணும் அசையும் சொத்துக்கள் 13.01.2011 அன்று இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி வளாகத்தில் கீழே கையொப்பமிட்டமிட்டுள்ளவரால் பொது ஏலத்தில் விற்கப்படவுள்ளன. விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் அசையும் சொத்துக்களை அவை இருக்குமிடத்தில் அதாவது எண்.329, ராஜா தெரு, பாடி, சென்னை - 600 050 -ல் 10.01.2011 அன்று காலை 11.00 - பிற்பகல் 3.00 மணிக்கிடையில் பார்வையிடலாம். சொத்துக்களைப் பார்வையிட விரும்பும் உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் வழக்கறிஞர் ஆணையர் திரு.K.விஜய் அவர்கள் தொலைபேசியில் (8428025564) தொடர்பு கொள்ளலாம். விற்பனை விதிமுறை நிபந்தனைகள் மற்றும் அசையும் இயந்திரங்கள் பட்டியல் வழக்கறிஞர் ஆணையர் மற்றும் விண்ணப்பதாரரான உதவி பொது மேலாளர், இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி, எண்.207 AIEMA டவர், இரண்டாவது தளம், முதல் பிரதான சாலை, அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை-600 058 அவர்களிடம் பெறலாம். இந்த ஏலத்தில் பொது மக்கள் விலைக்குறிப்பீடு செய்ய வரவேற்கப்படுகின்றனர். ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் தங்களது விலைக்குறிப்பீட்டுடன் அட்டவணையில் கீழே குறிப்பிட்டுள்ள டேவணித்தொகையை (EMD) தேசியமயமான / ஷெட்யூல்டு வங்கியின் கேட்புவரைவோலை / பே ஆர்டர் / வங்கியாளர் காசோலை வடிவில் இணைத்தும் TAN / PAN அட்டையின் போட்டோ நகல்கள் இணைத்தும் உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.**

விலைக்குறிப்பீடுகள் அடங்கிய உறையின் மீது மேற்படி வழக்கு எண், வழக்கு தரப்பினர் (விண்ணப்பதாரர், எதிர்வாதிகள்) பெயர், விலைக்குறிப்பீடு சமர்பிக்கும் கடைசி தேதி என எழுதப்பட்டிருக்க வேண்டும். விலைக்குறிப்பீடுகள் அடங்கிய மூடி முத்திரையிடப்பட்ட உறைகள் ஏலம் நடத்தப்பெறும் தேதிக்கு இரண்டு (2) பணி நாட்களுக்கு முன்னர் 11.01.2011 அன்று மாலை 4.30 மணிக்குள் உதவி பொது மேலாளர், இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி, எண்.207 AIEMA டவர், இரண்டாவது தளம், முதல் பிரதான சாலை, அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை-600 058 நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் சமர்ப்பிக்கலாம். கேட்புக்காசோலை / பே ஆர்டர் / வங்கியாளர் காசோலையை "Small Industries Development Bank of India" என்ற பெயரில் எடுக்க வேண்டும். ஏலத்தின் முடிவில் வெற்றிபெறா விலைக்குறிப்பீட்டாளர்களுக்கு கேட்புவரைவோலை / பே ஆர்டர் / வங்கியாளர் காசோலை திருப்பியளிக்கப்படும். உயர்ந்தபட்ச விலைக்கோரி வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளர் சார்பாக ஏலம் இறுதி செய்யப்பட்டவுடன் அவர் தாம் செலுத்தியுள்ள EMD தொகையை கழித்துக் கொண்டு மீதியுள்ள விற்பனைத் தொகையை கேட்பு வரைவோலை / பே ஆர்டர் / வங்கியாளர் காசோலை வடிவில் செலுத்திவிட்டு அசையும் பொருட்களை அகற்றிச் செல்ல வேண்டும். அவ்வாறு தொகையை செலுத்தத்தவறினால் ஏலம் நடத்திய செலவுகள்/ கட்டணங்கள் கழிக்கப்பட்டு மீதமுள்ள தொகை பறிமுதல் செய்யப்பட்டு விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய கடன் பாக்கியில் வரவு வைக்கப்படும் பின்னர் அசையும் சொத்து மறு விற்பனை செய்யப்படும். இந்த விற்பனை தற்போது அமலில் உள்ள சட்டங்களுக்குட்பட்டது. ஏல விற்பனை விதிமுறை நிபந்தனைகள் அடங்கிய பிரதியை வழக்கறிஞர் ஆணையர் / விண்ணப்பதாரர் அவர்களிடமிருந்து பெறலாம்.

**LIST OF MOVABLES**

| S.No | Description | Qty | Value (in Rs) |
|---|---|---|---|
| 1 | Coil winding machines with clutch | 11 | 11000 |
| 2 | Enamel Removing machine | 5 | 7500 |
| 3 | Pre Coil Winding Machine | 2 | 1000 |
| 4 | Field Coil Tapping Machine | 2 | 1000 |
| 5 | Arbor Press | 2 | 1000 |
| 6 | Air Compressor (3HP) Tank alone | 1 | 500 |
| 7 | Fly Press Machine | 1 | 500 |
| 8 | Fly Press Machine | 1 | 1000 |
| 9 | High Voltage Break Down Tester (0-5000v) | 1 | 5000 |
| 10 | High voltage Break Down Tester(0-500v) | 2 | |
| 11 | Portable Digital Multimeter | 1 | |
| 12 | Digital 3 Digital Multimeter (0-099.99) | 2 | |
| 13 | Agronic 92c Regulated Power Supply (0-30v-0-5a) | 1 | |
| 14 | LCR Meter | 1 | |
| 15 | 3 ½ Digital Ohm Meter | 6 | |
| 16 | Electronic Temperature Reader | 1 | |
| 17 | Megger | 1 | |
| 18 | Test Rig for Checking Reverse Leakage of Diodes | 1 | |
| 19 | Electronic Tachometer | 1 | |
| 20 | Push Pull Meter | 1 | |
| 21 | Bench Grinding Machine | 1 | 500 |
| 22 | Drilling Machine ¾" Geared | 3 | 5000 |
| 23 | 4 ½ Fleet Lathe | 1 | 10000 |
| 24 | Hacksaw Cutting Machine | 1 | 3000 |
| 25 | Surface Grinding Machine | 1 | 6000 |
| 26 | Special Purpose Machine for performing final forming of stator Assay | 1 | 1000 |
| 27 | Steel Body Power Press | 1 | 50000 |
| 28 | 5 HP Power Pack & Intensifier | 1 | 5000 |
| 29 | Elgi Air compressor only Tank | 1 | 500 |
| 30 | Complete design and development of PC based alternator stator coils test rig with Coil Resistance test, Milli volt drop test, Flash test, surge testing and Data logging | 2 | 5000 |
| 31 | Complete design and development of PC based brake coil performance test right to test coil resistance test, flash test, surge test, Turns test and Turns tester with Data logging and PASS * FAIL | 1 | 2000 |
| 32 | Complete design and development of wiring harness test rig with continuity, interchange test with hotter for fall | 1 | 500 |
| 33 | Complete design and development of Force Measurement and Gauss measurement of brake coils with load indication | 1 | 500 |
| 34 | Complete design and development of AC Motor test rig with Load test and lock torque test | 1 | 500 |
| 35 | 2 ton semi automatic crimping machine | 1 | 1000 |
| 36 | Parts of dismantled Special Purpose automatic wire cutting and lead stripping machine 230B/50W-2800 RPM overall dim : 490X390X860 | 1 | 1000 |
| 37 | Parts of dismantle crimping tools with pillar guide set fixtures | 2 | 2000 |
| 38 | Special Purpose "c" typed Iron Body Toggle press (for crimping) with 40mm stroke length | 4 | 4000 |
| 39 | Special Purpose LCA for liners manufacturing (Flaring, Forming) | 5 | 5000 |
| 40 | Special Purpose Automatic Torroidal Winding Machine | | 1500 |
| 41 | Fume extractor unit with pipeline and fitting for soldering operation | | 500 |
| 42 | Progressive Tools & Pillar guide set for export flag terminal | | 1000 |
| 43 | Special Purpose Aurmature Winding Machine | | 1000 |
| 44 | Office Steel cupboard (15 Nos.), Furniture and Fixtures | | 65000 |
| | **விற்பனை : தனி / ஒரு தொகுப்பாக** | | **200000** |

**குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.2,00,000/-**

**EMD : குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%: ரூ.20,000/-**

**விருப்பமுள்ள நபர்கள் /விலைக்குறிப்பீட்டாளர்கள், திரு.K.விஜய், வழக்கறிஞர் ஆணையர், Tel No. 8428025564, ப்ளாட் எண்.A-3, II தளம், குருகிரிபா அப்பார்ட்மெண்ட்ஸ், எண்.80 முதல் அவின்யூ, அசோக் நகர், சென்னை 600 083 என்ற முகவரியில் தொடர்புக்கொள்ளலாம்.**

இடம் : சென்னை<br>
தேதி : 05.01.2011

(திரு.K.விஜய்)<br>
வழக்கறிஞர் ஆணையர்